பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

27 07 2025 SUNDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ராஜராஜ சோழன் மற்றும் முதலாம் ராஜேந்திர சோழனின் பிரம்மாண்ட சிலைகள் தமிழகத்தில் நிறுவப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

2. நாடாளுமன்றத்தில் செங்கோலை நிறுவி தமிழர்களுக்கு பெருமை சேர்த்தவர் பிரதமர் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. வறுமையை ஒழிப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. மேட்டூர் அணையிலிருந்து ஒரு லட்சம் கனஅடி நீர் வெளியேற்றப்படுவதால் 11 மாவட்ட கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**--இனி விரிவான செய்திகள் - ---**

<<<<<<>>>>>>>

ராஜராஜ சோழன் மற்றும் முதலாம் ராஜேந்திர சோழனின் பிரம்மாண்ட சிலைகள் தமிழகத்தில் நிறுவப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவின் நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

தமிழில் வணக்கம் சோழ மண்டலம் என்று கூறியதோடு, ”நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க, இமைபொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க என்ற திருவாசகத்தின் வரிகளையும் பாடி பிரதமர் தமது உரையை தொடங்கினார்.

(Sound Byte – Modi (1) – 49 Sec. )

சோழர் ஆட்சிக்காலத்தில் பொருளாதாரம் மற்றும் ராணுவ வலிமை உச்சத்தை எட்டியதை சுட்டிக்காட்டிய பிரதமர், இது இன்றும் நமக்கு உத்வேகம் அளிப்பதாக கூறினார்.

நாட்டின் கலாச்சார அடையாளத்தை வடிவமைப்பதில் சைவ சித்தாந்தம் முக்கிய பங்கு வகித்ததாகவும் பிரதமர் தெரிவித்தார்.

*(Sound Byte – Modi (2) – 41 Sec. )*

தமிழ் கலாச்சாரத்தோடு ஒருங்கிணைந்த செங்கோல் நாடாளுமன்றத்தில் நிறுவப்பட்டதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

*(Sound Byte – Modi (3) – 28 Sec. )*

சோழர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்யும் வகையில் தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

*(Sound Byte – Modi (4) - 38 Sec. )*

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர டாக்டர் எல். முருகன், **செங்கோலை நாடாளுமன்றத்தில் நிறுவி தமிழர்களுக்கு பெருமை சேர்த்தவர் பிரதமர் திரு நரேந்திர மோடி என்று கூறினார்.**

*(Sound Byte - எல். முருகன் - 51 Sec. )*

முன்னதாக, இளைஞானி இளையராஜாவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

*(Sound Byte – இசை நிகழ்ச்சி 39 Sec. )*

இந்த நிகழ்ச்சியில் ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தையும், திருவாசகம் நூலையும் திரு நரேந்திர மோடி வெளியிட்டார்.

இதனைத்தொடர்ந்து திருச்சி விமான நிலையம் சென்ற பிரதமர், அங்கிருந்து புதுதில்லி புறப்பட்டு சென்றார்.

**<<<<<<>>>>>>>**

வறுமையை ஒழிப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

பொது விநியோகத்திட்டத்தின் சாதனைகள் குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 37 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நியாயவிலைக்கடைகள் செயல்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நியாயவிலைக்கடைகளில் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை வசதி உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>>>>**

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கோவை, நீலகிரி, தேனி மற்றும் தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் காரணமாக, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று மாலை நிலவரப்படி 88 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte –தருமபுரி தண்டபாணி – 35 Sec. )*

இந்நிலையில், மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு ஒரு லட்சம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளதால், காவிரி கரையோரம் உள்ள 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>>>>**

## மாவட்டச் செய்திகள்

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து நான்காம் மண்டல பாசனத்திற்கு இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

----------------

முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து 5 ஆயிரத்து 500 கனஅடியாக அதிகரித்துள்ளது.

----------------

ஈரோடு மாவட்டம் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கொடிவேரி அணை மூடப்பட்டு சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

----------------

தென்காசி மாவட்டம் குற்றால அருவியில் ஒன்பது நாட்களுக்கு பிறகு சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

--------------

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவில் ஆடித்தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

*<<<<>>>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

*பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 3 ஆயிரம் மீட்டர் Steeplechase பிரிவில் Ankita வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*மகளிர் 20 கிலோமீட்டர் நடை போட்டியிலும், ஆடவர் 400 மீட்டர் தொடர் ஓட்டத்திலும் இந்தியா வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*இப்போட்டியில் இந்தியா 2 தங்கம், ஐந்து வெள்ளி, ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

----------------

*அர்ஜென்டினாவில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Yashashiwini Gorpade – Harmeet Desai இணை வெள்ளிப்பதக்கம் வென்றது*

--------------

*Lagos சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sreeja Akula வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

---------------

*மான்செஸ்டரில் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் ஐந்தாவது மற்றும் இறுதி நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்பிற்கு 229 ரன் எடுத்துள்ளது.*

***<<<<<<>END>>>>>***